DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

OS.No : 394/2022 PW : 1

Name : மணி Age -

Father Name : சஞ்சீவ் ரெட்டி Village

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

Date: 12.02.2025.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வேப்பமலு பிரசாத் என்பவா் எனக்கு நண்பா் என்றால் சாிதான். வேப்பலு பிரசாத் என்பவா் முலம் தான் அபா்னா சுதா்சன் ஆகியோரை தொிய வந்தது என்றால் சாிதான், தாவா சொத்தின் வேப்பலு பிரசாத் என்பவருக்கு தான் முதலில் அதிகாரம் கொடுத்தீா்கள் என்றால் சாிதான். வேப்பலு பிரசாத், வெங்கடேசலு நானும் நண்பா்கள் என்றால் சாிதான். ரைஸ்சின் சன் என்ற நிறுவனத்தில் நான் பங்குதாரா் இல்லை. நான் சொல்வது போல் மேற்படி நிறுவனத்தில் பங்குதாரா் என்பதால் தாவா சொத்தில் அவருக்கு அதிகாரம் கொடுத்தேன் என்றால் இல்லை. தாவா சொத்திற்கு வங்கி கணக்கில் எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது என்றால் 2 செக் கொடுத்தா்கள், ஒரு செக் அபா்னா மற்றும் சுதா்சன் கொடுத்தா்கள். அபா்னா கொடுத்த செக்கில் ரூபாய். 21,15,496 மற்றும் சுதா்சன் கொடுத்த செக்கில் ரூபாய். 21,15,496 பணம் கொடுத்தா்கள். மேற்படி இரண்டு தொகையும் எனது வங்கி கணக்கில் வந்தது. நான் சொல்வது போல் தாவா சொத்திற்கு பதிவு செய்யும் போது இருவரும் 2 செக் கொடுத்தா்கள் என்றும் அதில் தலா ரூபாய் 25 லட்சம் குறிப்பிடப்பட்டிருந்தது என்று சொன்னால் அது சாியல்ல. பத்திர பதிவுக்கு முன்பு ரைஸ்சின் சன் என்ற நிறுவனத்தின் பெயருக்கு முன்பணமாக 50 லட்சம் கொடுத்த விவரம் தொியுமா என்றால் எனக்கு தொியாது. நான் சொல்வது போல் பொய் என்றால் 50 லட்சம் பெற்றுக்கொண்டு தான் பத்திர பதிவு வந்தீா்கள் என்றால் சாியல்ல. எதிா்மனுதாராிடம் தாவா சொத்திற்காக முழு பணத்தை வாங்கிகொண்டு பொய்யாக வழக்கை தாக்கல் செய்துள்ளீா்கள் என்றால் சாியல்ல. பிரதிவாதிகள் கொடுத்த செக் 1ல் பணத்தை

வேப்பமலு என்பவருக்கு அனுப்பியுள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தின் மொத்த மதிப்பு 92,30,992 ரூபாய் என்றால் சரிதான். தாவா சொத்தின் மொத்த பணத்தையும் பிரதிவாதிகள் அட்வாட்ஸ் மூலமாகவும் மீதமுள்ள தொகையும் செக் மூலமாகவும் முழுமையாக கொடுத்தார்கள் என்றால் சரியல்ல.

Sd/. M.A. Kabeer
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம்
திருவள்ளூர்,